**HMOP NO. 5 /2025**
**Date 05.03.2026**
**ம.சா.1 சுமித்ரா**
**எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு திருமணம் ஆகி எத்தனை வருடங்கள் ஆகிறது என்றால் 2 வருடம். திருமணம் எங்கு வைத்து நடைபெற்றது என்றால் சங்கரன்கோவிலில் உள்ள சங்கரநாராயண சாமி கோவிலில் வைத்து நடைபெற்றது. குழந்தைகள் உள்ளதா என்றால் இல்லை. நான் எத்தனை வருடங்களாக என் கணவரை பிரிந்து வாழ்ந்து வருகிறேன் என்றால் 2 வருடமாக பிரிந்து வாழ்ந்து வருகிறோம். ஊர் பெரியோர்கள் முன்னிலையில் சேர்ந்து வாழ சமாதானம் பேசப்பட்டதா என்றால் சமாதானம் பேசப்பட்டது. அந்த சமாதான பேச்சு வார்த்தையில் சேர்ந்து வாழ உடன்பாடு ஏற்படவில்லை. திருமணத்தின் போது எனக்கு போடப்பட்ட நகைகள் மற்றும் எனக்கு கொடுக்கப்பட்ட சீர்வரிசைகள் என்னிடம் தான் உள்ளது என்றால் சரிதான். எதிர் மனுதாரர் மீது உள்ள குற்றச்சாட்டுகளை தவிர்த்து எதிர் மனுதாரருக்கு விவாகரத்து வழங்க சம்மதமா என்றால் சரியல்ல.

Sd/–P.Mahindra Varma,
Subordinate Judge,
Sankarankovil.